மஹர பிரதேச சபை - 2024
----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஹர பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகலவிரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவு சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, மஹர பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் மற்றும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள்,

ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 ஆண்டு முதல் காணப்படுகின்ற ரூபா 22,821 இற்கான தொங்கல் கணக்கு செலவு மீதியை சரி செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2025 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	மீதியை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றின் மீதி ரூபா 1,334,579,803 தொகையும் அத் திகதியில் உள்ளவாறு சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனம் ரூபா 1,334,724,999 தொகையும் காணப்பட்டமையால், ரூபா 145,196 தொகையினால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2025 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.	சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமப்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 10 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய அட்டவணைகளின் கூட்டுத்தொகையிடையே ரூபா 55,901,826 தொகைக்கான இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது.	2025 இறுதிக் கணக்குகளின் மூலம் சரியான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படும் என.	இணக்கமின்மைகளை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.7 இணங்காமை

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதேச சபை நிதி நிருவாகத்திற்குரிய கணக்கு அலுவல்கள் தொடர்பான விதி இலக்கம் 83 II	பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கான ஊழியர் கடனிற்காக தனியான முற்பணக் கணக்கொன்று பேணிச் சென்றிருக்கவில்லை.	எதிர் காலத்தில் தனியாக முற்பணக் கணக்கொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தனியாக முற்பணக் கணக்கொன்று பேணிச் செல்ல வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம்			
	i. 396	காலவதியாக ரூபா 175,991 தொகைக்கான 19 காசோலைகள் தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இது தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதென கருணையுடன் அறிவிக்கின்றேன்.	நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும்.
	ii. 571	02 வருடங்களை மிகைத்துள்ள 03 வகையான வைப்புக்களில் ரூபா 2,650,036 தொகையான 838 வைப்புக்களை ஆதனவழிப்புச் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இது தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதென கருணையுடன் அறிவிக்கின்றேன்.	நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும்.
	iii. 189	ரூபா 11,800 தொகைக்கான மதிப்பளிக்கப்படாத	இது தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்ற	நிதிப் பிரமாணங்களின்

காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தென கருணையுடன் அறிவிக்கின்றேன்.	படி செயற்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 72,517,881 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர் மாறாக முன்னைய ஆண்டின் செலவை மிகைத்த வருமானம் ரூபா 98,414,694 தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
வீதவரி மற்றும் வரி	86,791	81,602	85,125	139,696	87,729	83,279	56,865	130,967
வாடகை	5,640	4,655	5,602	113	5,112	4,320	4,266	183
அனுமதிப் பத்திரக் கட்டணம்	2,228	1,604	1,604	_	2,230	1,633	1,633	_
ஏனைய வரு மானங்கள்	406,853	-	440,919	_	27,549	-	32,672	-
	501,512	**87,861**	**533,250**	**139,809**	**122,620**	**89,232**	**95,436**	**131,150**

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிறுவை வீதவரிப் பெறுமதி ரூபா 138,657,542 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த நிலுவைத் தெகையை அறவீடு செய்வதற்காக தொடர்ச்சியாக நடமாடும் சேவை, களத்தில் சென்று அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது என.	நிலுவை வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	மீளாய்வாண்டின் சிட்டையிடப்பட்ட வீதவரிப் பெறுமதி ரூபா 81,602,445 தொகை எனினும், நடைமுறை ஆண்டிற்காக அறவீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 36,747,654 தொகையாக காணப்பட்டமையால், சிட்டையிடலின் மூலம் அறவீடு செய்யப்பட்ட பெறுமதி 45 சதவீத அளவான குறைந்த பெறுமதியொன்றினை கொண்டிருந்தது.	2023 மார்ச் 31 திகதி அளவில் வருடாந்த சிட்டையிடலில் 23 சதவீதம், அதாவது 18,652,581 தொகையொன்று அறவீடு செய்யப்பட்டிருந்தது என.	சிட்டையிடல் சரியாக மேற்கொண்டு வருமானம் சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டு இறுதித் திகதி அளவிலும் 2020 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை 03 நீதிவான் நீதிமன்றங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணத்திற்காக அட்டவணைகள் தயாரித்திருக்கவில்லை.	2023 மற்றும் 2024 ஆண்டுகளுக்காக உரிய பொலிஸ் நிலையங்களில் இருந்து தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றது என.	அட்டவணைகள் தயாரித்து வருமானங்கள் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டு இறுதித் திகதி அளவிலும் 2022 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை 06 காணிப் பதிவாளர் அலுவலகங்களிலிருந்து அறவீடு செய்ய வேண்டிய முத்திரை கட்டண அட்டவணைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2023 ஆண்டில் கம்பஹா காணிப் பதிவாளர் அலுவலத்தின் அட்டவணை பிரதி செய்யப்பட்டு முடிவடைந்தது 2024 ஆண்டிலேயே. 2024 ஆண்டு முத்திரைக் கட்டணம் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றது என.	அட்டவணைகள் தயாரித்து வருமானங்கள் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1989 ஆண்டு முதல் 2023 திசெம்பர் வரை 34 வீட்டு வாடகையாளர்களினால் வைப்புச் செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 625,258 இற்கான வைப்புப் பெறுமதியொன்று 1972 இன் 07 ஆம் இலக்க வீட்டு வாடகைச் சட்டத்தின் பிரிவு 21(3) இன் பிரகாரம் வீட்டு வாடகை உரிமையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செலுத்தப்படாமல் பல வருட காலம் முதல் வைப்புப் பதிவேட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.	வீட்டு வாடகை உரிமையாளரினால் வைப்புத் தொகை வேண்டப்பட்டிருக்காமையால் வைப்புக் கணக்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தது என.	வைப்புத் தொகை குறிப்பிட்ட வைப்பு உரிமையாளர்களும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	சபையின் உத்தியோகத்தர்களின் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல் அடையாளப்படுத்துவதற்காக விரல் அடையாள இயந்திரம் ஒன்று காணப்பட்ட போதிலும் சபை உத்தியோத்தர்களின் திட்டமிடல் குழு முடிவடைந்த பின்னர் அலுவலகங்களிலிருந்து வெளியே	2025 பெப்ரவரி மாதம் இறுதியில் இருந்து திட்டமிடல் குழு நடைபெறும் நாட்களில் அதில் பங்குபற்றும் சபையின் உத்தியோகத்தர்கள் கூட்டத்தின் இறுதியில் அலுவலத்தை விட்டு	விரல் அடையாள இயந்திரத்தின் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல் பதிவு செய்யப்பட வேண்டும்.

	செல்லும் போது நேரப் பதிவு இலத்திரனியல் விரலடையாளம் வைத்திருக்காததுடன், திட்டமிடல் குழுவின் தீர்மானப் புத்தகத்தில் திட்டமிடல் குழுவிற்கான பங்குபற்றிய உத்தியோத்தர்களின் உள்வரவு மற்றும் வெளிச் செல்லும் நேரம் காட்டப்படாமல் கையொப்பமிடல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	வெளியில் செல்லும் போது விரல் அடையாள இயந்திரத்தில் பதிவு செய்துவிட்டு வெளியே செல்கின்றனர் என.	

3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையினால் 171 காணிகள் பயன்படுத்தப்படுகின்றதென அவதானிக்கப்பட்டதுடன், அந்த காணிகளின் 02 காணிகளுக்காக சபையின் உரித்துரிமையை உறுதிப்படுத்துவதற்கான எழுத்துமூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், மேலும், 97 காணிகளுக்காக நில அளவைப்படங்கள் காணப்படவில்லை எனவும் அவதானிக்கப்பட்டதால், அந்தக் காணிகள் அங்கீகாரமற்ற நபர்களினால் பயன்படுத்தப்படுதல் சட்ட விரோதமாக தனதாக்கக்கூடிய ஆபத்து நிலைமையொன்று காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது.	தற்போது நில அளவைப் படங்கள் தயாரிக்கும் ஒரு நில அளவைப் படத்திற்கு பாரிய செலவொன்று ஏற்படுகின்றமையால் வருடாந்த பாதீட்டு ஏற்பாடுகளின் படி காணிகளை நில அளவை செய்து நில அளவைப் படங்கள் தயாரித்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதென.	சொத்துக்களின் உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சான்றுகள் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	சபையினால் பராமரிக்கப்பட்டு பேணிச் செல்கின்ற 37 மயானங்கள் மற்றும் ரூபா 21,000,000 தொகை பெறுமதியான 04 தகன கூடங்களின் காணிகளின் உரிமை 2025 ஜனவரி 15 திகதி அளவிலும் சட்ட ரீதியாக உரித்தாக்கியிருக்கவில்லை.	37 மயானங்களை நில அளவை செய்து உரித்தாக்குவதற்காக மஹர பிரதேச சபையினால் நில அளவை திணைக்களத்திற்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது என.	காணிகளின் உரிமையை சட்டரீதியாக உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	ரூபா 3,500,000 தொகை பெறுமதியான பேலியகொடை நகர சபையிலிருந்து கிடைத்திருந்த Foton வகையை சேரந்த பெக்கோ இயந்திரத்தின் உரிமையை உரித்தாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	உரிமையை உரித்தாக்குவதற்கு தேவையான ஆவணங்கள் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என.	உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	மஹர உப அலுவலகத்தின் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி	இந்த மடிக்கணினி குறிப்பிட்ட உத்தியோகத்தரினால்	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

	பொருட் பதிவேடில் பதிவு செய்யப்பட்டுள்ள மடிக்கணினிகள் பண்டக் கணிப்பீட்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், அது தொடர்பாக தொடர் விசாரணை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்ததுடன், இரவு நேரத்தில் அவருடைய வீட்டுக்கு கள்வர்கள் வந்து அந்த மடிக் கணினியை மற்றும் ஏனைய பொருட்கள் எடுத்துச் சென்றிருந்தது தொடர்பாக பணிப்பொறுப்பு உத்தியோத்தரினால் 2024 பெப்ரவரி 03 திகதி யக்கல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளது என.	
(உ)	பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி மஹர பிரதேச சபையின் 07 நூலகங்கள் தொடர்பாக 1052 புத்தகங்கள் காணாமல் போயிருந்ததெனவும், அதன் பெறுமதி ரூபா 244,758 தொகையாக அவதானிக்கப்பட்டதுடன், அதன் சேதம் மற்றும் நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

3.3 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கெந்தலியத்த நூலகத்தில் காணப்படும கட்டிடத்திற்கு அண்மையில் 17.4 அடி நீளம், 10 அகலம் கொண்ட அறையொன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 430,155 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் தரைக்கு கொங்கிரீட் போடப்பட்டிருக்காமையால், பயன்படுத்தக்கூடிய நிலைமையொன்று காணப்படாமையால் மேற்கூறிய செலவு சிக்கனமற்ற செலவொன்றாக ஆகியிருந்தது.	2024 ஆண்டு பொது நிதியம் கடன் கொடுத்தோரின் கீழ் ரூபா 710,000 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட கெந்தலியத்தபாலுவ கிழக்கு மைத்திரி சிரேஷ்ட பிரஜைகள் அமைப்பினால் வேலைகளை பூர்த்தி செய்திருந்ததுடன், தற்போது குறிப்பிட்ட கட்டிடம் பயன்படுத்தப்படுகின்றது என.	சொத்துக்களை பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு ஆக்கப்பட வேண்டும்.
(ஆ)	சிவுருமுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் தெல்கஹலந்த சனசமூக திருத்த வேலைக்காக ரூபா 1,200,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், இந்த சனசமூக நிலையத்தின் சாந்து பூசுதல் மற்றும் ஏனைய நிர்மாண வேலைகள் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், கூரை மற்றும் அஸ்பஸ்ரோஸ் வேய்தல் தகடு போடப்பட்டு குறிப்பிட்ட நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், யன்னல்கள் மற்றும்	2025 ஆண்டில் அதன் மீதி வேலைகளை பூர்த்தி செய்து பயன்படுத்துவதற்காக ஏற்பாடுகள் ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சொத்துக்களை பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு ஆக்கப்பட வேண்டும்.

	கதவுகள் போடப்பட்டிருக்காமையால் தொடர்ந்தும் அந்தக் கட்டிடம் பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்பட்டது.		
(இ)	அரமங்கொட சேவை இல்லக் கட்டிடத்திற்காக மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 900,000 பெறுமதியான வலை மறைப்புடனான அறையொன்றை நிர்மாணிப்பதற்காக 2024 ஆண்டின் போது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஏற்பாடுகள் கிடைத்திருந்தது. தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டின் படி விடய இலக்கம் 13 இன் கீழ் Slabs, beams, lintols, columns ஆகியவற்றிற்காக தேவையான வலுவூட்டல் 5.31 kg தொகை 1 kg இன் பெறுமதி ரூபா 2,671 தொகை என மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், கொடுப்பனவு அறிக்கையின் படி அந்த விடயத்திற்காக 118.86kg பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் படி 113.55kg மிகையாக பயன்படுத்தப்பட்டிருந்தமையால், அந்த விடயத்திற்காக மதிப்பீட்டை விட ரூபா 57,115 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.	நிர்மாண வேலைச் சந்தர்ப்பத்தில் அத்தியவசியமான இடங்களுக்காக மேலதிக வலுவூட்டப்படல் தேவைப்பட்டமையால், மதிப்பீட்டுத் தொகையை விட கூடிய எண்ணிக்கையான கம்பி பயன்படுத்தப்பட்டதுடன், அந்தப் பகுதிக்காக கொடுப்பனவு மிகையாக காணப்பட்டதுடன், மீதித் தொகை சங்கத்தினால் அவர்களின் நிதியத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டவையாக காணப்பட்டது என.	மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும்.
(ஈ)	அமுனு கும்புர தெற்கு எக்சத்கம சனசமூக நிலையத்தின் கூரையின் திருத்த வேலைக்காக ரூபா 854,788 தொகை செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூபா 855,141 தொகையாக இருந்தது. இந்த சனசமூக நிலையத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	சொத்துக்களை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

3.4 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் 11 பதவிகளில் 21 வெற்றிடங்கள் காணப்பட்டன.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் ஏற்படுகின்ற வெற்றிடங்களுக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்குரிய படிவத்தின் மூலம் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டிருந்தமையால், ஆட்சேர்க்கும் அலுவல்கள்	வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	மேற்கொள்ள முடியாமல் உள்ளது என.	
(ஆ) 2001 ஆகஸ்ட் 22 திகதிய 18/2001 இலக்கம் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் படி 05 வருடங்களுக்கு ஒருமுறை இடமாற்றம் செய்யப்படாத 06 வருடங்களுக்கும் 15 வருடங்களுக்கும் இடைப்பட்ட சேவையில் ஈடுபடும் 11 உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	உத்தியோகத்தர்களுக்காக பதிலாள் வராமையால் அவர்களின் கடமைகளை அணவல் செய்வதற்காக உத்தியோகத்தர்கள் காணப்படாமையால், குறிப்பிட்ட பதிலாள் சபைக்கு வரும் வரை அவர்களை புதிய சேவை நிலையத்திற்கு விடுவிப்பதற்கு இயலுமையொன்று காணப்படவில்லை என.	சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

3.5 வாகனப் பயன்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பெறுமதியை கண்டறிய முடியாத சபைக்குச் சொந்தமான குபோடா கைடிரக்டர் ஒன்று 2015 ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டு காணப்பட்டது. இந்த வண்டியை ஏல விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதித் திகதி வரை அது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	இந்த டிரக்டர் வண்டி ஓட்ட நிலைக்கு பொருத்தமான நிலைமையில் காணப்படாமையால், ஏல விற்பனைக்கு பொருத்தமானது என இயந்திரப் பொறியியலாளர் பரிந்துரைத்திருந்த போதிலும், குறிப்பிட்ட பெறுமதி மதிப்பீட்டு, சந்தை விலைக்கு ஒப்பாக போதியளவாக காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டமையால் இந்த டிரக்டர் வண்டி தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக அடுத்து நடைபெறும் கூட்டத்திற்கு சமர்ப்பித்து அதன் தீர்மானத்தின் படி பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என.	திருத்த வேலை மேற்கொள்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.